Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 06
சனிக்கிழமை
02 டிசெம்பர் 2023
கார்த்திகை 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"மாரிமழையால
வெள்ளம் வந்தால்தான்
கெடுதல்,
உந்த 9ஏ மழை பெய்தா
நல்லதுதானே"

# போதைப்பாவனையால் யாழில் எய்ட்ஸ் உயர்வு?

## மருத்துவர்கள் அபாய அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 2

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள போதைப் பாவனையால், எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கலாம் என வடபிராந்திய பாலியல் நோய் தடுப்பு சிகிச்சை நிலைய மருத்துவ நிபுணர் மருத்துவர் ஏ.றொகான் தெரிவித்துள்ளார். 11



### வடக்கில் தீவிரமாகும் எய்ட்ஸ்

## வவுனியாவில் இவ்வருடம் 2 புதிய தொற்றாளர்கள்!

வவுனியா, டிசெ. 2

வடக்கு மாகாணத்தில் எய்ட்ஸ் தொற்று பரவிவரும் நிலையில், வவுனியாவில் இவ்வருடம் புதிதாக இருவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது என்றும், இதுவரை 21பேர் தொற்றாளர்களாக உள்ளனர் என்றும் வவுனியா பொதுமருத்துவமனையின் பாலியல்நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மருத்துவ கலாநிதி திருமதி அருள்மொழி பாஸ்கரன் தெரி 11

## 'மஹாபொல' இரு மடங்கு!

கொழும்பு, டிசெ. 2

மஹாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவை இரண்டு மடங்காக அதிகரிப்பதே எமது நிலைப்பாடு. அது தொடர்பில் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். 11

## போதகர் ஜெரோம் மறியலில்!

கொழும்பு, டிசெ. 2

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பௌத்தம் உள்ளிட்ட மதங்களை இழிவுபடுத்தியதாக அவர்மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. கடந்த சில மாதங்களாக வெளிநாட்டில் இருந்து நாடுதிரும்பிய அவர் நேற்று 11

## வேம்படியில் '9ஏ' மழை!

110 மாணவிகள் சாதிப்பு
யாழ்.இந்துவில் 74 பேர்

யாழ்ப்பாணம், டிசெ. 2

கல்விப்பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 11

## 13,588 பேர் '9ஏ'



### வேம்படி மாணவியொருவர் தேசியத்தில் இரண்டாமிடம்

கொழும்பு, டிசெ. 2

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இம்முறை 13 ஆயிரத்து 588 மாணவர்கள் 9 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

'சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 2 இலட்சத்து 45 ஆயிரத்து 521பேர் உயர்தரம் 11

### கப்பல் சேவையை மேம்படுத்த

## துறைமுகப் பகுதிகளில் இந்தியத் தூதர் ஆய்வு

மன்னார், டிசெ. 2

இந்தியா மற்றும் இலங்கை இடையே படகுச் சேவைகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ள நிலையில், காங்கேசன்துறை மற்றும் தலைமன்னார் பகுதி 11

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துவதைக் கைவிடுக!

### ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 2

பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவதை இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டும் என்று 11

### சித்திரவதைக்கொலை:

## மேலும் சில சாட்சிகள் நீதிமன்றத்தில் பதிவு!

யாழ்ப்பாணம், டிசெ. 2

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட நிலையில், இந்த வழக்கில் மேலும் சில சாட்சியங்கள் நீதிமன்றத்தில் தோன்றி தமது சாட்சியத்தை வழங்கியுள்ளனர். 11



## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் விவாதிக்காமல் நிறைவேறாது

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 2

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் நிறைவேற்றப்படாது. எவருடைய உரிமையையும் பாதிக்காத வகையில் எதிர்வரும் ஜனவரி அல்லது பெப்ரவரியில் சட்டவரைவு நிறைவேற்றப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு 11

### மாவீரர் நினைவேந்தலின்போது

## கைதானோரை விடுவியுங்கள்!

கொழும்பு, டிசெ. 2

மாவீரர் தினத்தன்று பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்களை, விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்காட்சி



யாழ்ப்பாணம், டிசெ. 2

யாழ். சிவில் சமூக அமைப்புகள்,கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் 1823 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 வரையான காலப்பகுதி வரை மலையகத்தின் 200 ஆவது ஆண்டை முன்னிட்டு "யாழில் மலையகத்தை உணர்வோம் "மலையகம் 200" எனும் கருப்பொருளில் மலையக மக்களின் வாழ்வியல் ஆவணமாக்கப்படும் கண்காட்சிகள் யாழ். தந்தை செல்வா கலையரங்கில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இந்தியவாம்சாவளியில் இருந்து இலங்கையின் மலையகத்தில் மீள்குடியேறிய தமது ஜீவனோபாயத்துக்கு உழைக்கும் மலையக லயங்களில் வாழ்வியல் தொடர்பாக கண்காட்சிகள் கார்ட்டூன் சித்திரங்களாவும், புள்ளிவிபரத்தரவுகளாகவும், விளக்க புகைப்படச்சித்திரங்களாகவும், ஆரம்பகால முத்திரை வெளியீடுகளாகவும், ஆரம்ப காலம் தொட்டு இன்று வரையான காலத்தில் அரசியல்வாதிகளின் புகைப்படங்களும், ஒடுக்குமுறை மற்றும் மக்களின் இயல்புகள் பற்றிக் காட்சிப்படுத்தப்பட்டன.

நிகழ்வில் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ஜோண் குயின்ரஸ் பிரதம அதிதியாகவும், சிறுவர் அபிவிருத்தி நிறுவன முகாமையாளர் ம.இன்பரூபன், வணபிதா நிக்சன் அடியார்கள், சி.சி, டெற் இலங்கையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரீ.மயூரன், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் முத்துலிங்கம், பாடசாலை மாணவர்கள், கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள், சிவில் சமூகத்தினர், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-20)

# மருந்துத்தட்டுப்பாட்டை நிவர்த்திக்க புலம்பெயர்ந்தவர்கள் உதவவேண்டும்

## முன்னாள் எம்.பி. சரவணபவன் கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 2

**கோப்பாய் மருத்துவமனையில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அரசு நிதி ஒதுக்கவுமில்லை. கோப்பாய் மண்ணில் பிறந்து புலம்பெயர்ந்து வாழுகின்றவர்கள் அறப்பணி செய்ய முன் வர வேண்டும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கோபாய்ப் பிரதேச மருத்துவமனைக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்டு மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி மற்றும் நோயாளர் நலன் புரிச் சங்கத்தினரிடம் கலந்துரையாடிய பின்பு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபையாலோ அல்லது வேறு எந்த முறையாலோ இந்த மருத்துவமனையை மேம்படுத்த முடியாமல் உள்ளது., வழக்கம் போல கோப்பாய்ப் பிரதேச மருத்துவமனையிலும் மருந்துத் தட்டுப்பாடு தொடர்கின்றது.

புலம்பெயர் மக்கள் தங்கள் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு மருத்துவமனைகளிலும் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்திக்க வேண்டும். மருந்துத் தட்டுப்பாட்டால் பாதிக்கப்படுவது இங்குள்ள மக்கள்தான். எனவே எங்கள் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு புலம்பெயரிகளான உங்களுக்கு உண்டு. உங்கள்பிரதேசமருத்துவமனைகளைத் தொடர்புகொண்டு அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து உதவி செய்யுங்கள் - என்றார். (ஒ-125)

## உச்சம் தொடும் மரக்கறி விலை

கொழும்பு, டிசெ. 2

நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன என்று நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விலை அதிகரிப்பு எதிர்வரும் நத்தார் பண்டிகைக் காலம் வரை தொடரும் என சந்தை வட்டாரம் தெரிவிக்கின்றது.

சந்தை நிலைவரங்களின்படி போஞ்சி கிலோ 800 முதல் 850 ரூபாய் வரையிலும், கரட் கிலோ 550 முதல் 600 ரூபாய் வரையிலும், கோவா கிலோ 540 ரூபாய் வரையிலும், தக்காளி ஒரு கிலோ 590 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

இஞ்சி 1750 ரூபாவுக்கும், எலுமிச்சை 2 ஆயிரத்து 200 ரூபாவுக்கும், பச்சை மிளகாய் ஆயிரத்து 100 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)

## ஐ.எம்.எப். வரவேற்பு

கொழும்பு, டிசெ. 2

கடனளிக்கும் நாடுகளுடன் இலங்கை ஏற்படுத்திக்கொண்ட கொள்கை ரீதியான உடன்படிக்கைகளை சர்வதேச நாணய நிதியம் வரவேற்றுள்ளது.

இலங்கையின் பிணை எடுப்புத் தொடர்பான முதல் சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுச்சபை மதிப்பாய்வை அடுத்த மாதத்தில் பரிசீலிப்பதற்கு இது வழிவகுத்துள்ளது என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியுடன் சுமார் 4.2 பில்லியன் டொலர் கடன் தொடர்பில் எட்டப்பட்ட உடன்பாடு மற்றும் பரிஸ் கிளப்பின் இணை தலைமை நாடுகளின் உடன்பாடு என்பன வரவேற்கத்தக்கன என்றும் நாணய நிதியத் திட்டத்தின் இலங்கைத் தூதுக் குழுவின் பிரதானி பீற்றர் ப்ரூயர் தெரிவித்தார். (ச-இ)

## திரிபோஷாவுக்கு நீங்கியது தடை!

கொழும்பு, டிசெ. 2

திரிபோஷா விநியோகத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அடுத்த மாதம் முதல் தடையில்லாமல் திரிபோஷா விநியோகிக்கப்படும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான செலவினத் தலைப்பு மீதான விவாதத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (ச-இ)

## இந்தியாவிலிருந்து வருகின்றது சம்பா!

கொழும்பு, டிசெ. 2

எதிர்வரும் பண்டிகைக் காலத்துக்காக, இந்தியாவிலிருந்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் சம்பா அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதிக்குள் சம்பா அரிசியை லங்கா சதொச, கூட்டுறவு மற்றும் பல்பொருள் அங்காடிகள் ஊடாக நுகர்வோருக்கு கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அரச வர்த்தக பல்வேறு சட்ட ரீதியான கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆ.சிறி வலிசுந்தர தெரிவித்தார். (ச-இ)



## 'உதயனால்' விழிப்புணர்வு புத்தகங்கள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 2

உதயனின் 38ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சுகாதார ஆரம்ப சுகாதார வழிகாட்டி நூல்கள் அராலியில் அமைந்துள்ள வட்டுக்கோட்டைப் பிரதேச மருத்துவமனைக்கும் தொல்புரம் ஆரம்ப மருத்துவ சுகாதாரப் பிரிவுக்கும் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் வட்டுக்கோட்டைப் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி, உதயன் குழுமத் தலைவர் ஈஸ்வரபாதம் சரவணபவன் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையின் தாதியர்கள், உத்தியோகத்தர்கள், தொல்புரம் ஆரம்ப மருத்துவ சுகாதாரப் பிரிவின் மருத்துவ அதிகாரி, சமூகச் செயற்பாட்டாளர் சண்முகநாதன் ஜெயந்தன் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-125)

## இ.போ.ச.வுக்கு காலக்கெடு

கொழும்பு, டிசெ. 2

இலங்கைப் போக்குவரத்துச்சபை எதிர்வரும் 2024 ஆம் ஆண்டுக்குள் இலாபம் ஈட்டவில்லையெனில், அதனைத் தனியார் மயமாக்க நேரிடும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பல எண்ணிம திட்டங்களை எதிர்வரும் ஆண்டில் நடைமுறைப் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையை இலாபகரமான நிறுவனமாக மாற்றவேண்டும்.

இலங்கைப் போக்குவரத்துச்சபையில் இடம்பெற்ற மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு விசேட பிரிவொன்று நிறுவப்படவுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நசுக்கப்படும் ஊடக சுதந்திரம் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, டிசெ. 2

**ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி வேண்டியும் வவுனியாவில் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.**

இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கில் ஊடகவியலாளர்கள் தொடர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதுடன், வவுனியாவில் செய்திசேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் பொலிஸாரால் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இவற்றுக்கெதிராக ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கப்படும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் பங்கேற்று வலுப்படுத்தவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச-18)

## சிவராஜா இந்து வித்தியில் முதல்முறையாக 9'ஏ' சித்தி

மன்னார், டிசெ. 2

வெளியான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மன்னார் கல்வி வலயத்தின் நானாட்டான் கோட்டத்தில் அமைந்துள்ள சிவராஜா இந்து வித்தியாலயம் பாடசாலை வரலாற்றில் முதல் முறையாக 9'ஏ' தரச் சித்திகளை இம்முறை பெற்றுள்ளது .

அத்துடன் இரண்டாவது சாதனையாக 8'ஏ' மற்றும் 1 பி தரத்தையும் பெற்றுள்ளது. இந்து சமய பாடத்துக்குத் தோற்றிய 10 மாணவர்களும் அந்தப் பாடத்துக்கு 'ஏ' தரச் சித்தியையும், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவத்துக்கு தலா ஒவ்வொரு மாணவர் தோற்றியிருந்தனர். அவர்களில் இஸ்லாமுக்கு தோற்றிய மாணவன் 'ஏ' தரச் சித்தியையும், கிறிஸ்தவத்துக்குத் தோற்றியவர் 'பி' தரச் சித்தியையும் பெற்றுள்ளனர். (ஒ-213)

## உறுதி கையளிப்பு

வவுனியா, டிசெ.2

வவுனியா மாவட்டத்தில் முதலியார்குளம், வீரபுரம், மகாறம்பைக்குளம், வேரகம கிராமங்களைச் சேர்ந்த 66 பயனாளிகளுக்கு உறுதிப்பத்திரங்கள் நேற்று வவுனியா தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு சிங்களப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலர், பிரதேச செயலாளர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ச-ரி-.75,18,100)

## யாழ். பல்கலைக் கல்லூரி தொழில்நுட்பக் கண்காட்சி



யாழ்ப்பாணம், டிசெ. 2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரி மாணவர்களின் தொழில்நுட்பக் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

'ரெக்டோபியா 2023' எனும் தொனிப்பொருளில் நேற்று ஆரம்பமான கண்காட்சி இன்றும் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்.மாவட்டச் செயலர் சிவபாலசுந்தரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27)



## வகுப்பறை மீது மரம் சாய்ந்தது

யாழ்ப்பாணம், டிசெ. 2

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் வகுப்பறைக் கட்டடம் மீது அத்தி மரம் சரிந்து வீழ்ந்துள்ளது.

இந்த இடரில் பெரும் சேதம் ஏற்படவில்லை என்றும் மரத்தை வெட்டி அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி-27)

## தினம் தெரியுமோ?

**வருசத்தில முந்நூற்று அறுபத்தைஞ்சு நாளும் ஏதோ ஒரு சர்வதேச தினத்தை நாங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறம். ஆனால் அந்தத் தினங்களை ஏன் கொண்டாடுறம்? எண்ட தெளிவு கனபேரிட்ட இல்லை. அதால இந்தத் தினங்களை ஏதோ கடமைக்கு அண்டைக்கு மட்டும் விழா மாதிரிக் கொண்டாடிப்போட்டு, அவரவர் தங்கட பாட்டில போடுவினம். பிறகு அடுத்தவருசம் அதேநாள், அதே பனர், அதே விருந்தினர், அதே பேச்சு, அதே மைக், அதே பார்வையாளர் எண்டு அரைச்ச மாவை இன்னும் புளிக்கப் புளிக்க அரைச்சாத்தான் அவைக்குப் பத்தியப்படும். உண்மையில உலகத்தில உள்ள பிரச்சினையளை சனங்கள் விளங்கிக் கொண்டு, அதுக்கேத்தபடி சரியான வழியில நடக்கிறதை நினைவுபடுத்துற 'அலார்ம்' மாதிரித்தான் இந்தத் தினங்களை ஐ.நா.சபை அறிவிக்கிறது. ஆனால் எங்கட ஆக்களுக்கு அதுகளைப் பற்றிக் கவலையில்லை. கொண்டாடுறதுக்கு ஒருதினம் கிடைச்சால் சரி. அப்பிடி ஒரு சர்வதேச தினத்தைக் கொண்டாடுறம் எண்டு, அந்தத் தினத்தின்ர அடிப்படையையே குழப்பியிருக்கினம் சிலர். அதுவும் மெத்தப் படிச்ச, டொக்டர்மார் எண்டால் நம்பமுடியுமோ?**

**நவம்பர் 14 ஆம் திகதி உலக நீரிழிவு தினம் . இப்ப இலங்கையிலையும் உந்தச் சலரோகம் கூடிப்போச்சு. அதால சீனிப்பாவனையைக் குறையுங்கோ, இல்லாட்டி சீனியையே பாவிக்காதையுங்கோ எண்டு எல்லாரும்வாய்ஓயாமல்சொல்லிக்கொண்டே இருக்கினம். ஏனெண்டால், கூடுதல் சீனிப் பாவனையாலதான் எங்கட ஆக்களுக்கு சலரோகம் கூடுதலா வருகுது. இப்பிடி எல்லாரும் சலரோகத்தைக் கட்டுப்படுத்த சீனிப் பாவனையைக் குறைக்க என்ன செய்யலாமெண்டு யோசிச்சுக் கொண்டிருக்கேக்க, இந்தமுறை உலக நீரிழிவு தினத்தை ஒரு ஆஸ்பத்திரியில 'கேக்' வெட்டிக் கொண்டாடியிருக்கினம். அவைக்கு இது விழிப்புணர்வு நாள் எண்டு தெரியேலைப்போல. ஏதோ பிறந்தநாள் பார்ட்டி மாதிரி ஐசிங் கேக் வெட்டி, ஆளுக்கு ஆள் தீத்தி விளையாடியிருக்கினம்.**

**எந்தச் சீனியால சலரோகம் வருகுதோ அதே சீனியை அள்ளிப்போட்டுச் செய்யிற ஐசிங் போட்ட கேக்கை வெட்டுறதுதான் சலரோகத்தைக் கட்டுப்படுத்தச் சரியான வழி எண்டு சனம் பிழையா எல்லோ நினைக்கப் போகுது. ஆர் வழிகாட்ட வேணுமோ அவையே இப்பிடி பிழையான வழிமுறையளைக் காட்டிக் குடுத்தால் சலரோகத்தை என்னெண்டாம் கட்டுப்படுத்திறது. முதல்ல உந்தக் கேக் வெட்டி சலரோக தினத்தைக் கொண்டாடினவைக்கு சரியான விழிப்புணர்வு செய்யோணும்.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும். சக வியாபாரிகளிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**கடகம்:** திடீர் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறை வேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** அவப்பெயர் நீங்கும். நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும். முக்கியமான முடிவுகள் சாதகமாகும்,வியாபாரத்தில் மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**கும்பம்:** உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். மனதில் ஏற்பட்டிருந்த குழப் பங்கள் நீங்கும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

## அன்னதான நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 2

மேல்மருவத்தூர் அருட்திரு பங்காரு அடிகளார் இறை சமாதிநிலையடைந்த 45 ஆவது தினத்தை முன்னிட்டு மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்வு யாழ். நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது என்று மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்விச் சமூகநலம் பண்பாட்டு அறப்பணி மையத்தின் நிறுவனர் சக்தி சுவிஸ் சுரேஷ் அழைப்பு விடுத்துள்ளார். (ரி)

## வேதசிவாகம விழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 2

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வேதசிவாகமப் பெருவிழா இன்று சனிக்கிழமை ஊரெழு மேற்கு ஸ்ரீ மீனாட்சியம்பாள் ஆலய மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்களின் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் சிவஸ்ரீ இ.ரமணிதரக் குருக்கள், கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் ஆகியோர் வரவேற்புரையை ஆற்றவுள்ளனர். தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ச-17)

## நடன அரங்கேற்றமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், டிசெ.2

எல்லிசை ஆடலரங்கத்தின் நடன அரங்கேற்றம் மற்றும் ஆடல் தடங்கள் நூல் வெளியீட்டு நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. இதில் விசேட அதிதியாக மலேசியா நுண்கலைக்கல்லூரியின் நடனத்துறைத் தலைவர் சங்கர் கந்தசாமியும் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பங்கேற்கவுள்ளனர்.

நிகழ்வில் வரவேற்புரையை மன்னார் வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாவித்தகர் கனகரத்தினம் மனோரஞ்சன், ஆசியுரையை திருகோணமலை தென்கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார், தலைமையுரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

ஆடல் தடங்கள் நூலை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டு வைக்கவுள்ளார். (ச)



## கூ.சங்கங்களுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 2

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை நிலையங்களில் பொருள்களின் விற்பனையை அதிகரிப்பது சம்பந்தமான பயிற்சிச் செயலமர்வு நேற்று வெள்ளிக்கிழமை அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றது. கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தக் கருத்தமர்வு முன்னெடுக்கப்பட்டது. யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் இந்தச் செயலமர்வுக்குத் தலைமை தாங்கினார். (ச-இ)

## திருட்டு மாடு இறைச்சியாக்கிய சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 2

காரைநகரில் மாடு ஒன்றைத் திருடி இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மற்றொருவர் தப்பிச்சென்றுள்ளார் என ஊர்காவற்றைப் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே ஐந்து கிலோவுக்கு அதிகமான இறைச்சி கைப்பற்றப்பட்டது. தப்பிச்சென்ற சந்தேகநபரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-23)

## கூட்டுறவு சங்கத்தின் கிளைக்குழு தேர்தல்

தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் (கைதடி) கிளைக்குழு தேர்தல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளைகள் ரீதியாக நடைபெறவுள்ளது. உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச)



## பனம்விதை நடுகை

யாழ்ப்பாணம், டிசெ. 2

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் தனங்களப்பு வெளியில் பனம்விதைகள் நடுகை செய்யப்பட்டன. யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (ச-17)

## அலைபேசிகளைக் களவாடிய குற்றச்சாட்டில் 2 பேர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 2

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த சில நாள்களாக மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் மற்றும் நோயாளர்களை பார்வையிட வருபவர்களின் அலைபேசிகளைத் திருடிய குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்,யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவின் உதவிப் பொலிஸ் பரிசோதகர் மதுர பெரும தலைமையிலான அணியினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.நெல்லியடியைச் சேர்ந்த ஒருவரும் திருட்டு அலைபேசிகளை வாங்கிய குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஒருவருமே கைது செய்யப்பட்டனர். கடந்த மூன்று நாள்களுக்குள் திருடப்பட்ட பெறுமதியான தொலைபேசிகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அலைபேசிகளை யாராவது தொலைத்திருந்தால் அவர்கள் நேரடியாக வந்து உரிய ஆதாரங்களைக் காட்டி அலைபேசிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என குற்றத்தடுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஓ-20,26)

## வளவாளர் தேர்வு நேர்முகப்பரீட்சை

வவுனியா, டிசெ. 2

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின் கீழான ஓமந்தை கலாசார நிலையத்தில் நடத்தப்படும் அடுத்த ஆண்டுக்கான புதிய பாடநெறிகளுக்கு வளவாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள வளவாளர்கள் தங்கள் சுயவிபரம் மற்றும் தகைமைச் சான்றிதழ், பிரதிகளுடன் வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்தியாவை நம்பமுடியுமா?


தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக டில்லியை அணுகும் முயற்சி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. தாயகத்திலுள்ள தமிழ் அரசியல் பிரதிநிதிகள், சிவில் செயற்பாட்டாளர்களுடன், புலம்பெயர் சமூகத்தின் ஒரு சில பிரதிநிதிகளும் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் முகாமிட்டுள்ளனர். இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியுடன் சந்திப்பு நடத்துவது இவர்களின் நோக்கம். பாரதிய ஜனதாக் கட்சி இந்துத்துவா கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றுகின்றது என்ற அடிப்படையில் அங்குள்ள இந்து அமைப்பு ஒன்றின் ஏற்பாட்டிலேயே தமிழ் மக்கள் பிரதிநிதிகள் டில்லியில் சந்திப்புகளில் ஈடுபடுகின்றனர். ஊடக சந்திப்பை இவர்கள் கடந்த 29 ஆம் திகதி நடத்தியிருந்தனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், ‘அரசமைப்பின் 13ஆவது திருத்தம், மாகாணசபை முறைமைகள் உட்பட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அனைத்து முழு விடயங்களும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தமிழர் தாயகம் சீனா மற்றும் இந்தியா ஆகிய இரண்டு வல்லாதிக்க சக்திகளின் மைதானமாக மாறி வருகின்றது. இலங்கை அரசாங்கம் சீனாவுடன் நட்புப் பாராட்டி, இந்தியாவுடன் குழைந்து காரியங்களைச் சாதித்து வருகின்றது. ஆனால், தமிழர் தாயகமோ இந்தியாவுடன் மட்டும்தான் என்று தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றது. இந்த உறுதியான நிலைப்பாட்டை இந்தியா சரிவரகைப்பற்றிக்கொள்ளவேண்டும்’ என்று உரைத்திருக்கின்றார்.

விக்கினேஸ்வரன் குறிப்பிட்டதைப்போன்று தமிழர் தாயகம் சீனா மற்றும் இந்தியாவின் வல்லாதிக்கப் போட்டிக்களமாக மாறிக்கொண்டிருப்பதை நமது கண்முன்னாலேயே கண்டுகொண்டிருக்கின்றோம். சீனத்தூதுவர் வடக்குக்கு வருகிறார், அவர் வந்து சென்ற அத்தனை இடங்களுக்கும் இந்தியத் தூதுவரும் செல்கிறார். மன்னாருக்கும் இந்தியாவுக்கும் இடையில் தரைவழிப் பாதை தொடர்பான சாத்தியக் கூற்றாய்வுகள் நடக்கின்றன என்று யாழ்ப்பாணத்தில் வைத்துச் சொல்கிறார் இந்தியத் தூதுவர். ஆனால் மன்னாருக்கும் - இராமேஸ்வரத்துக்கும் இடையிலான இலங்கைக்குச் சொந்தமான மூன்றாவது மண்திட்டில் சீனா இரகசியக் கட்டுமானங்களை மேற்கொள்வதாகச் சொல்லப்படுகின்றது. இந்திய மீனவர்கள் அத்துமீறி வடக்கின் கடல்வளங்களைச் சூறையாடுவதாக ஒரு தரப்பு குற்றம் சுமத்த, மறு தரப்பு சீன ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் கடல் அட்டைப் பண்ணைகளால் பாரம்பரிய மீன்பிடி அழிவடைவதாக சுட்டிக்காட்டுகின்றது. இந்திய - சீன நேரடி மோதலுக்குள் தமிழர் தாயகம் ஈர்க்கப்பட்டு விட்டது. இது இன்று நேற்று நடந்தது அல்ல. தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதிலிருந்து படிப்படியாக இதுதான் நடந்து வருகின்றது.

ஆனால், தமிழ் மக்கள் நம்பியிருந்த இந்தியாவோ, இலங்கை அரசாங்கத்தைப் பகைக்கக் கூடாது என்பதில் மாத்திரமே தெளிவாக இருக்கின்றது. அரசற்ற தமிழர்களுக்காக குரல் எழுப்புவதற்குக்கூட திராணியற்றிருக்கின்றது. இப்படிப்பட்ட சூழலில் மீளவும் இந்தியாவை நம்பி மாத்திரம் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் செயலாற்ற முனைவது சரியா? 1980 களிலிருந்து இந்தியாவை மாத்திரம் நம்பி இதுவரை கண்டவை என்ன? இந்திய - இலங்கை ஒப்பந்தம் முழுமையாக நடைமுறையாகி, 13 ஆவது திருத்தமும் - மாகாணசபை முறைமையும் - முழுமையாக நடைமுறையாகினால் தமிழர்கள் தற்போது எதிர்கொள்ளும் நெருக்கடிகள் எல்லாம் தீர்ந்து விடுமா?

ஒரு பேச்சுக்கு, இப்போதைய சூழலில் மாகாணசபை முறைமையும், 13 ஆவது திருத்தச்சட்டமும் முழுமையாக நடைமுறையாகின்றது என்று வைத்துக்கொள்வோம். சில மாதங்களிலேயே தென்னிலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அங்கு வரும் புதிய தலைவர் இவற்றையெல்லாம் தூக்கி எறிந்தால் என்ன செய்வது? மீண்டும் இந்தியாவிடம் ஓடுவதா? இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பயனாக இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பிரிக்கப்படும் போதே வாளாதிருந்த இந்தியா, தனது ஒப்பந்தம் கண்முன்னாலேயே இலங்கை அரசாங்கத்தால் சிதைக்கப்படும் போது மௌனியாக இருந்த இந்தியா, தன்னை எட்டி உதைத்துவிட்டு சீனாவுடன் இலங்கை தேனிலவு கொண்டாடும் போதும் ஓடியோடி உதவிகள் செய்த இந்தியா, இனியும் எங்களுக்கு உதவப்போகின்றது என்பதை நம்பவா முடியும்?






# சர்வதேசம் பச்சைக்கொடி தூசுதட்டப்படும் அபிவிருத்தி

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



**கொழும்பு, டிசெ. 2**

**இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டை மேற்கொள்ள சர்வதேச சமூகம் இணங்கியுள்ளது. அதற்கமைய நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என்று நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு மீண்டும் சுவாசிக்க ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

சர்வதேச சமூகத்தின் இந்த இணக்கத்தினூடாக நாடளாவிய ரீதியில் நிறுத்தப்பட்டிருந்த திட்டங்களை மீள ஆரம்பிக்கமுடியும். வீதிகள், பாலங்கள், மேம்பாலங்கள் மற்றும் இடை நடுவில் கைவிடப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் என்பன வெளிநாட்டுக் கடன்களினூடாக முன்னெடுக்கப்படவுள்ளன. நிறுத்தப்பட்ட அனைத்துத் திட்டங்களும் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளன- என்றார். (ச-44)

# இல்லச் சிறார்களில் விசேட அவதானம்

கொழும்பு, டிசெ.2

சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களின் உளநலம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்று இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களின் நிலை தொடர்பில் சமிந்த விஜேசிறியால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

விசேட தேவையுடைய சிறுவர்கள் தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

# தொழில் இன்மையால் நிர்க்கதியில் பெண்கள்

## சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 2

ஆடைத்துறையிலுள்ள தொழிற்சாலைகள் இதுவரை 2 ஆயிரம் வரை மூடப்பட்டுள்ளதால் பெண்கள் வேலையிழந்து மாற்றுவழியில் பணம் தேடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரை 2000 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் 5 இலட்சத்து 33 ஆயிரத்து 858 பேர் வேலை இழந்துள்ளனர்.

20 சதவீத ஆடைத்தொழிற்சாலைகள் மூன்று மாதங்களுக்குள் மூடப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நாளை

03.12.2023

**ஞாயிற்றுக்கிழமை**

**கார்த்திகை 17**

சுபநேரம் : 09.15 - 10.45


ராகுகாலம் : 04.45 - 06.15

## நாளொரு நல்வார்த்தை

உன் நேசத்துக்குரியவரின் குறைகளை
நீ காதலிக்கவில்லை என்றால்,
நீ காதலிக்கவும் இல்லை;
நேசிக்கவுமில்லை!.

*- முஸ்தஃபா காஸிமி -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதிய அலுவலகம்

வவுனியா, .டிசெ. 2
வவுனியா காணி உரித்து நிருணயத் திணைக்களத்துக்கான அலுவலகம் வவுனியா மாவட்டச் செயலக வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை திறக்கப்பட்டது. (ரி -75)

# ஒன்றிணைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.2
நல்லிணக்கத்துக்கான இளைஞர் ஒன்றிணைவு நிகழ்வு கல்லுண்டாயில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை 'சொன்ட்' நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் செந்தூர்ராஜா தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் மொழிப் பிரச்சினை தொடர்பான அளிக்கை, இன மத சார் முக்கியமான சட்டங்களின் தொகுப்பு ஆகியன தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டன. (ரி -27)



# அறிவூட்டல் நிகழ்வு

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவப் பிரிவினால் நடத்தப்பட்ட "சுவதரணி" அறிவூட்டல் போட்டி நிகழ்வு பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவப்பிரிவின் அபிவிருத்திப் பணிப்பாளர் பீ. தயானந்தன், மருத்துவர் சிவகுமார், பச்சிலைப்பள்ளி உதவிப்பிரதேச செயலர் திருமதி ச.குணஜா, ஆயுள்வேத வைத்தியர் அரவிந்தன், ஆசிரிய ஆலோசகர் ஞா.கலைச்செல்வி, பளை மத்திய கல்லூரி, கிளாலி றோமன் கத்தோலிக்க பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ரி -9)



காரைநகர் பிரதேசசபையின், மாவட்ட வன அலுவலகத்தின் அனுசரணையில் மரநடுகைத் திட்டமொன்று காரைநகர் கசூரினா கடற்கரை சுற்றுலா மையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ரி-66)



யாழ்ப்பாணம் பீதாம்பரம் அறக்கட்டளை நிதியத்தின் நிதிப்பங்களிப்பில் மரநடுகை மாதத்தை முன்னிட்டு பழமரச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் அளவெட்டியைச் சேர்ந்த 250 குடும்பங்களுக்கு பழமரக் கன்றுகள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு அளவெட்டி பாரதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. (ரி-9)



# ஞானச்சுடர் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 2
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மு.ப. 10.30மணிக்கு நடைபெற்றது. ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அதிபர் செ.பரமேஸ்வரன் மலரின் வெளியீட்டுரை மற்றும் மதிப்பீட்டுரைகளை ஆற்றினார். (ரி-66)




# சாதனை!

வவுனியா, டிசெ.2
தேசிய மட்டத்தில் நடைபெற்ற விவசாய விஞ்ஞானப் போட்டியில் வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலய மாணவ. மாணவிகள் இரண்டாம் இடத்தையும், ஆறாம் இடத்தையும் பெற்றனர். (ரி-75)

# முகாமைத்துவ பயிற்சி

சாவகச்சேரி, டிசெ. 2
தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கோவை முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறி பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி-9)



# மர நடுகை

கோப்பாய் சுப்பிரமணிய கோட்டத்தினரின் மரநடுகைத் திட்டத்தின் கீழ், யாழ். வயாவிளான் மத்திய கல்லூரி வளாகத்தில் அண்மையில் மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களுடன் இணைந்து பயன்தரு மரங்கள் நடப்பட்டன. (ரி-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படவரைஞர்களைப் பதிவு செய்தல் - 2024

யாழ். மாநகரசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் கீழ்வரும் விடயங்களினைக் கருத்திற் கொண்டு, உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 04.12.2023 தொடக்கம் 29.12.2023ஆம் திகதி மதியம் 3.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை பௌதிக திட்ட மிடல் பகுதியில் மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்

- NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் உரிய சான்றிதழினை சமர்ப்பித்து படவரைஞராக பதிவுகளினை மேற்கொள்ளலாம்.
- ஏற்கனவே 2023 ஆம் ஆண்டுக்கான படவரைஞராக பதிவு செய்தவர்கள் NVQ-5 Drafting Technology (Buildings) கற்கை நெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தினை சமர்ப்பித்து பதிவினை புதுப்பித்துக் கொள்ள முடியும்.
- NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்யாத படவரைஞர்கள் 2024 ஆம் ஆண்டிற்கான புதிய படவரைஞராக பதிவினை மேற்கொள்ள முடியாது.
- மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களும், புதிதாக பதிவுகளை மேற்கொள்ளாத படவரைஞர்களும் 2024 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக யாழ் மாநகர சபையில் தொழிற்பட முடியாது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பு:
- படவரைஞராக பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவ கட்டணம் ரூபா 100.00+ VAT
- உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, படவரைஞராக பதிவு மேற்கொள்வதற்கு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கான கட்டணம் - ரூபா 2000.00 + VAT

மாநகர ஆணையாளர்,
யாழ் மாநகர சபை.

(er.41293) (N.1)

## வேலையாட்கள் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் பொதிகள் சேவை நிறுவனத் திற்கு ஆட்கள் தேவை. பருத்தித் துறை நகரில் வசிப்பவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்..

தொடர்புகளுக்கு:
076 0094 946

## டீசல் TANK விற்பனைக்கு


1400 லீற்றர் கொள்ளளவு கொண்ட எரிபொருள் கொள்கலன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
T.P: 077 386 6250

## மரண அறிவித்தல்

### செல்லையா செல்வநாதன்

தோற்றம்:17.03.1944 | மறைவு:01.12.2023



சுவாமியார் வீதி, கொழும்புத்துறை மேற்கினை பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட செல்லையா செல்வ நாதன் அவர்கள் நேற்று (01.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ருக்மணி தேவி மற்றும் சறோஜினிதேவி, கமல நாதன், ஸ்ரீசண்முகநாதன், சத்தியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கேசவன் (ஆசிரியர், யா/ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி), கவிதா (யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்ஷிகா (ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), செல்வகுமாரன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹாஷினி, ஹரிஸ், கபிஷன், சிவாகினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் துண்டி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மகன் - கேசவன்
077 958 2561


தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27256) A-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 14 • 01 • 1957

மறைவு 02 • 11 • 2023



### அமரர் கந்தையா சதானந்தன் (வவா)

*திதி : ஐப்பசி தேய்பிறை பஞ்சமி*

அணையா ஜோதியாய் ஆனந்த விளக்காய்
இன்முகம் கொண்ட ஈர நெஞ்சினராய்
புன்னகை பூக்கும் புதுமுக மனத்தினனாய்
வெள்ளைக் கமலத்து வாடாத உள்ளத்தினனாய்
பேரனைக் காக்கவென வேல் வடிவோனாய்
பேர்த்தியை கண்டதும் வள்ளிமணவாளனாய்
நித்தமும் ஒளிர்ந்த எம் சதாசிவதீபம்
நித்திய சுகத்தை தேடி சதாசிவமானாயோ
நினைவுகள் தினமும் எம்முடன் இருக்க
நிலையாக பற்றினீரோ வட்டுவினியான் திருவடி

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

"சரஸ்வதி மகால்",
மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 03 • 10 • 1931

மறைவு 01 • 11 • 2023



கடந்த (01.11.2023) புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் ஐயாத்துரை பொன்னம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

18, கல்லூரி வீதி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.
077 6184503

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 02 1979

மறைவு 30 11 2023



### திருமதி ஸ்ரீ ஜனனி அஜித்

இணுவிலை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீ ஜனனி அஜித் அவர்கள் 30.11.2023 வியாழக்கிழமையன்று இறைபதமடைந்தார்.

அன்னார் அஜித் அவர்களின் அன்பு மனைவியும் அமரர் விவேகானந்தன் - பேரின்பநாயகி தம்பதிகளின் அன்பு மகளும் சத்தியமூர்த்தி - ஈஸ்வரி தம்பதிகளின் மருமகளும் ஸ்ருத்திக்காவின் பாசமிகு தாயாரும் அமரர் ஸ்ரீஸ்கந்தவேள், ஸ்ரீசங்கரன், ஸ்ரீகஜானனன், ஸ்ரீபங்கஜா, ஸ்ரீ தட்சாயினி, ஸ்ரீபவானி ஆகியோரின் அன்புமிகு சகோதரியும் மாதினி, கோபிகா, சிவருபன், சுதர்சன், உமாகாந்தன் மற்றும் சுதர்சன், சத்தியாயினி ஆகியோரின் மைத்துனியும் மேனகா, ஞானக்குமரன் ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 02.12.2023 இன்று சனிக்கிழமை காலை 10 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 03.12.2023 நாளை ஞாயிற்றுக்கிழமை மீண்டும் காலை 8 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 12 மணிக்கு இறுதிக் கிரியைகள் இடம்பெற்று பிற்பகல் 02 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்
குடும்பத்தினர் (076 5586 090)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வைரவிப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வு பெற்ற புகையிரத ஓட்டுனர்)



சாரையடி, புலோலி, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவிப்பிள்ளை கந்தசாமி அவர்கள் 29.11.2023 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவிப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும், நாவேந்தன் (USA), பிரதீபா (Newsland) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனுஜா (USA) ஹர்சன் (Newsland) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஓவியா, நீலன், அக்சயா, அஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற தம்பிராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 03.07.1940 | இறப்பு 29.11.2023

தகவல்: சு.தங்கநவமணி நாதன் (மைத்துனர்) 077 276 7141

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 24 . 07 . 1942

ஆண்டவன் அடியில் 18 . 11 . 2016



அமரர்

## கதிர்காமு கந்தையா தியாகராசா

(AD Secretary Cum Chief Clerk of Chavakacheri MPCS Ltd)

*திதி : 02.12.2023*

துணிந்த நடையழகும் தூய உடையழகும்
அணிந்திடும் விபூதிப் பூச்சழகும்
ஆன்மீகவானாக அம்மனைத் தரிசிக்க
அயராது செல்லும் அழகும்
பணிந்திடாத ஆண்மையின் அழகும்
பார்க்கும் இடமெல்லாம் நீக்கமறத் தெரிகிறது
ஆண்டேழு ஆனாலும் ஆறாத துயரத்துடன்
ஆண்டேழில் சிராத்தம் செய்து அஞ்சலித்து நிற்கின்றோம்.

இத்தியடி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உடன்பிறப்புக்கள்.

(CS52971) (AK.1)

# மரண அறிவித்தல்



## சோமசுந்தரம் அற்புதம்

விளானை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் (தொண்டர்) அற்புதம் அவர்கள் நேற்று (01.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரம் (தொண்டர்) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது விளானை, களபூமி, காரைநகர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக களபூமி தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.
(பெறாமகன்)
0777770394, 0776437525,
0777922265

விளானை, களபூமி,
காரைநகர்.

(CR 41294)A-1

# புங்குடுதீவு இறுப்பிட்டி பெரியபுலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம் நிர்வாக சபை

## விசேட பொதுச்சபைக் கூட்டம்

மேற்படி ஆலய நிர்வாக சபையின் விசேட பொதுச்சபைக் கூட்டம் 17.12.2023ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நிர்வாக சபையின் தலைவர் திரு. நா. அம்பலவாணர் அவர்களின் தலைமையின் கீழ் ஆலயமுன்றிலில் நடைபெறவுள்ளது. தயவு செய்து ஆலயத்துடன் தொடர்புடைய அடியார்கள் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**விடயம் :** வெற்றிடமாகவுள்ள ஐந்து வருடத்திற்கொரு முறை தெரிவு செய்யப்படும் நிர்வாக உறுப்பினர்கள் இருவர் தெரிவு.

நா. அம்பலவாணர்
தலைவர்

க. தேவதாஸ்
செயலாளர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19.06.1942



மறைவு 13.12.2022

## செல்வி கணவதிப்பிள்ளை நாகேஸ்வரி

திதி : பஞ்சமி

தெய்வமே! எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் நீங்காது
எம்முள் இறையாகி என்றென்றும்
எமக்கு நல்லெ‌னை தந்திடுவீர்
*ஓம் சாந்தி*

44/2 மணல்தரை,
கந்தர்மடம்

நீங்காத நினைவுகளுடன்
அன்பு மருமக்கள், பெறாமக்கள்

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 06 - 1939



மறைவு 29 - 11 - 2023

## பொன்னம்பலம் இராசம்மா

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராசம்மா அவர்கள் கடந்த (29.11.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை செல்லம்மா அவர்களின் அன்பு மகளும், அமரர் நல்லம்மா, அமரர் தங்கமுத்து, செல்லத்துரை, அன்னபூரணம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை அப்பாச்சி அவர்களின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் (முன்னாள் இராணுவவீரர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் சண்முகம், அமரர் கனகம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், அற்புதராணி, வசந்தராணி, சகுந்தராணி, இன்பராணி, பரமேஸ்வரன், செல்வராணி, குகனேஸ்வரன், விக்னேஸ்வரன், புஸ்பராணி, கலாராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், ராசரட்ணம், சிவசங்கரநாதன், தங்கராசா, காலஞ்சென்றவரான வைகுந்தவாசன், பிரதீபா, சுதர்சன், கிரிசாந்தி, சிவாநந்தராசா, ரஞ்சன் ஆகியோரின் மாமியாரும், யோகமனோகரி, சுரேஷ், கேதீஷ், சிவரூபி, ஜீவரூபி, மீரன், சாங்கீதா, சாங்கீபன், தனுஜா, தவஜா அகிலன், நகுலன், கோகிலன், டாகுலன், சுரேகா, சுரேக்கா, சுரேஜன், டேவ்மீ, சோபி, சுபாசினி, சோபனா, மீரியம், மிலானி, ஜஸ்மின், ஜான், வினுஷ், ரேனுஷ், ஏஞ்சலிக்கா, அனோஜன், அஜந்தன், அகிர்ஜன், சிந்து, சிவேஷ், ஜெசிந்தன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நுணாவில் மேற்கு
நுணாவில்.

077 271 8916
077 809 8921

தகவல்:
குடும்பத்தினர்

## இளவாலையில் மிதிவெடி!

யாழ், டிசெ. 2

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, மாதகல் உயரப்புலம் பகுதியில் உள்ள காணி ஒன்றிலிருந்து நேற்று மிதிவெடியொன்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த காணியின் உரிமையாளர், காணியை சுத்தம் செய்யும் போது மேற்படி மிதிவெடியை அவதானித்து அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். நீதிமன்ற அனுமதிபெற்று மிதிவெடியை மீட்கும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (அ-ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் குருக்கள் குரலில் திரைப்பாடல்



யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் 'கட்டியம்' கூறலில் பிரசித்தி பெற்ற பிரசன்ன குருக்கள் பாடிய திரைப்படப் பாடல் ஒன்று பெருவர வேற்பைப் பெற்றுள்ளது.

தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் இந்தப் பாடலை தனது ருவிற்றர் பக்கத்தில் பகிர்ந்துள் ளார். ஈழத்தில் பெரு வெற்றிபெற்ற "புத்தி கெட்ட மனிதரெல்லாம்" திரைப் படத்தைத் தொடர்ந்து அந்தப் படத்தின் இயக்குநர் ராஜ் சிவராஜ் இயக்கத்தில் "டக் டிக் டோஸ்" எனும் திரைப்படம் உருவாகிறது.

இந்தத் திரைப்படத்தின் பாடல் ஒன் றையே நல்லூரில் "கட்டியம்" சொல்லி பிரசித்திபெற்ற பிரசன்ன குருக்கள் பாடியுள்ளார். பாடல் பலரது கவ னத்தை ஈர்த்துள்ளதுடன் பாராட்டும் பெற்றுவருகிறது. (ச-27)

## சிறுவர்களுக்கு தொழில்நுட்பக் கற்கை

வவுனியா, டிசெ. 2

வவுனியா வடக்கு வலய சிறுவர்களுக்கென தகவல் தொழில்நுட்பக் கற்கைநெறி கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவடைந்த நிலையிலுள்ள மாணவர்களுக்கு 100 மணிநேரம் கொண்ட சிறுவர் கணினிக் கற்கையும் code.org கற்கைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு இந்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடக்கு வலய கணினி வள நிலையத்தினதும், மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தினதும் ஏற்பாட்டில் இந்தக் கற்கைநெறிகள் வவுனியா வடக்கிலுள்ள பிரதான பாடசாலைகளில் பயிற்றுவிக்கப்படவுள்ளன. (ச-75)

## மழையால் பாதிப்பு

சாவகச்சேரி, டிசெ. 2

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெய்துவரும் மழையால் நாவற் குழி ஐந்து வீட்டுத்திட்ட கிரா மம் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

83 குடும்பங்களைச் சேர்ந்த 291 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியிலுள்ள வெள்ளம் அயலில் உள்ள கடற்பரப்புக்கு வழிந்தோடுவதெனவும் அந்த வாய்க்கால் செல்லும் பகுதியில் தனியார் கட்டடம் கட்டியுள்ள மையால் வெள்ளம் தேங்கியுள் ளது எனவும் மக்கள் குற்றம் சுமத் துகின்றனர். (ஒ-9)

## கிராமிய வீதிகளுக்கு அடுத்தவாரம் விடிவு

கொழும்பு, டிசெ. 2

நாடளாவிய ரீதியில் சேதமடைந்துள்ள கிராமிய வீதிகளைப் புனரமைக்கும் பணி கள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்ப டும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலை கள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் 20 பில்லியன் ரூபா கடனுதவி வழங்க இணங்கியுள்ளது.

அதன்படி கிராமப்புறங்களிலுள்ள சேதம டைந்த வீதிகளின் விவரங்களை ஆராயு மாறு துறைசார் அதிகாரிகளுக்குப் பணிக் கப்பட்டுள்ளது என்றும் பந்துல குண வர்த்தன மேலும் குறிப்பிட்டார். (ச-44)

# சுனில் திஸாநாயக்கா யாழ். பல்கலைக்கு நியமனம்

கொழும்பு, டிசெ. 2

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த கற்கைகள் நிறுவனப் பணிப்பாளர் நாயகமும் விருந் தோம்பல் துறை விரிவுரையாளருமான சுனில் திஸாநாயக்கா யாழ்ப்பாணப் பலக் லைக்கழக சுற்றுலா விருந்தோம்பல் முகாமைத்துவ சிறப்பு கற்கைகள் பீட உறுப்பின ராக நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வடமாகாண சுற்றுலா நிறுவனத்தின் ஆலோசகர் குழு உறுப்பினராகவும் சுனில் திஸாநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார். (ஓ-6)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் 19 ஆவது பிறந்த தினமும்

மலர்வு 12.02.2004

உதிர்வு 13.12.2022



### சுரேந்திரன் காருஷன்

திதி: அபரபட்ச பஞ்சமி





அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்துப் பக்குவமாய் வழிநடந்த
இரக்கத்தின் இருப்பிடமாய் எல்லோர்க்கும் நல்லதாய்
எல்லோர் மனதிலும் இருந்த எம் காருஷன
ஏனோ! இறைவன் இடை நடுவில் பறித்துவிட்டான்
ஓடி மறைந்ததடா ஓராண்டு உன் நினைவுகள்
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறைந்திடுமா
பண்புள்ளோரைப் பலகாலம் வாழவிடக் கூடாதென்றா?
உம்மை ஆண்டவன் அழைத்தான் என் செய்வோம் இறைவன் சித்தம் இது
இனிக் காணமுடியாத சோகநிலையோடு இங்கிருந்தே ஏங்கி அழுகின்றோம் - மகனே!
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.


அன்னாரின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனை இன்று (02.12.2023) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஆனைவெட்டி வேலணை,
ஆனைவெட்டி.

பிரிவால் துயருற்றிருக்கும்
அம்மா, அப்பா.

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 01 |
| 06 | 12 |
| 1939 | 2023 |



### அந்தோனிப்பிள்ளை வேதநாயகம்(மணி)

மீசாலையை பிறப்பிமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப் பிள்ளை வேதநாயகம் (மணி) அவர்கள் நேற்று (01.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை மரியம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் மோட்சலங்காரம் தம்பதி யரின் அன்பு மருமகனும், மேரிறொக்ராணி அவர்களின் அன்புக் கணவரும், அன்ரன் தங்ககுலசிங்கம் அவர்களின் அருமை மைத்துனரும், மரீனா மரிய டெய்சி, மரீனா குயின்ஸ்ரா, றெஜி பிராங்கிளின், றெஜிநோல்ட், பௌலா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவரான சாமுவேல் ஜோண்சன் மற்றும் அன்ரன் பற்றிக், றெஜி லூயிஸ்ரன், டயானா, பசில்டா ஆகியோரின் அன்பு மாமனாரும், றோஸ் ஜெனற், கிளைபேட் றொசில்டன், பேறி கிளாரண்ஸ், குயின் செரோமி, ஜில்பேட் றியூபன், ஆன் கிளமென்சியா, குயின்ஸ்ரன், இனோபியா, ஒலிவியா றொக், ஆன் மக்னோறியா, கெலன் றொக், அப்ரியானா றொக், என்சோ மேரியஸ், கெஸ்வின் அன்ரோன் ஆகியோரின் அன்புப் பேரனும், எய்டன் ஜொனஸ் இன் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.12.2023) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 1174 954
077 5375 244

(CS 27259) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்துரை

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேலுடனான 60 வருட அரசியல் பயணத்தின் அனுபவப் பகிர்வும் கருத்துரைகளும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை மாலை 5 மணியளவில் புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(அ-ம-66)

## குருதிக் கொடை

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று சனிக்கிழமை குருதிக்கொடை முகாம் இடம்பெறவுள்ளது.

மு.ப. 10 மணி முதல் பி.ப. 3 மணி வரை பல்கலைக்கழகக் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகில் இந்தக் குருதிக்கொடை முகாம் இடம்பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சுகாதார விழிப்புணர்வு நடைபயணம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகில் ஆரம்பித்து யாழ். நகர் வரை சென்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நிறைவடையவுள்ளது.

வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(அ-ம-66)

## அலெக்ஸ் மரணத்துக்கு நீதிகேட்டுப் போராட்டம்!

வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகளால் படுகொலை செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸின் மரணத்துக்கு நீதிகோரியும், வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டுவரும் சட்டவிரோத சித்திரவதைகளைத் தடுத்து நிறுத்தக் கோரியும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு வட்டுக்கோட்டைச் சந்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கண்டனப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

(அ-ம-66)

## மாநகர எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணித்தல் 2024

யாழ் மாநகரசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் இதுவரை பதிவு செய்யாத நிறுவனங்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டு பதிவினை மேற்கொண்ட நிறுவனங்கள் 2024 ஆம் ஆண்டுக்கான பதிவுகளை 04.12.2023 தொடக்கம் 29.12.2023 ஆம் திகதி மதியம் 3.00 மணிக்கு முன்னர் பௌதிக திட்டமிடல் பகுதியில் பதிவுகளினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன். யாழ் மாநகர சபையில் பதிவினை மேற்கொள்ளாது குழாய்க்கிணறு நிர்மாணிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**குறிப்பு:**

- குழாய்க்கிணறு நிர்மாணிப்பதற்கு பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவ கட்டணம் - ரூபா 100.00+ VAT
- உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு. பதிவு மேற்கொள்வதற்கு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கான கட்டணம் - ரூபா 2000.00 + VAT

**மாநகர ஆணையாளர்,**
**யாழ் மாநகரசபை.**

(cr.41292) (N.1)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் நிதி முகாமைத்துவ துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்

**திருமதி தர்சிகா பிரதீஷ்**

அவர்களின் தாயார்

**திருமதி**
**வெண்கமலதேவி முருகேசு**

கடந்த (30.11.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி அறிந்து துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள், நிதி முகாமைத்துவத்துறை, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## மரண அறிவித்தல்

மண்ணில் 12 . 06 . 1954



விண்ணில் 30 . 11 . 2023

**பாவிலுப்பிள்ளை மரிய பெர்னாண்டோ**

மானிப்பாய் நவாலியைப் பிறப்பிடமாகவும் தும்பளை தெற்கு பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலுப்பிள்ளை மரிய பெர்னாண்டோ நேற்று முன்தினம் (30.11.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாவிலுப்பிள்ளை திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராயப்பு மற்றும் திரேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும். மேரிவிளிவிக்ரர் (இளைப்பாறிய ஆசிரியர் யா/கலட்டி றோ.க.த.பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும். டியோனி அவர்களின் பாசமிகு தந்தையும். கிளிற்றஸ் அவர்களின் அன்பு மாமனாரும். மதுரநாயகம். வேதநாயகம். கிறிஸ்துராஜா. செல்வநாயகம். அரசநாயகம் காலஞ்சென்றவர்களான நீக்கிளஸ் இராசநாயகம். பேரின்பநாயகம். மேரி ரோசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் டெவ்னியாவின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (02.12.2023) சனிக்கிழமை காலை 11 மணியளவில் கற்கோவளம் புனித செபஸ்தியார் ஆலயத்தில் இடம்பெற்று கற்கோவளம் புனித செபஸ்தியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR1296)A-1

## யாழ்ப்பாணம் மாநகர சபை

இறைச்சிக் கடைகள். கருவாட்டுக்கடை. பல்பொருள் வாணிபக்கடைகள் (நாவாந்துறை). சந்தைகள். சிற்றுண்டிச்சாலை, வாகனப்பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

**மீள் கேள்வி அறிவித்தல் - 2024 (01.01.2024 - 31.12.2024)**

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் 01.01.2024 ம் திகதி முதல் 31.12.2024 ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா **1,150.00** (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 04.12.2023-11.12.2023
(மு.ப **9.00** - பி.ப.**3.00** மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 12.12.2023 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 12.12.2023 மு.ப 10.00 மணிக்கு

விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **12.12.2023 ம் திகதி மு.ப 10.00 மணிக்**கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

**இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கள் பல்பொருள் வாணிபம், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை, சந்தைகள் மீள் கேள்விகோரல் - 2024**

| இல | விபரம் | கடை இல | பிணை வைப்பு | ஆரம்ப கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 56,100.00 |
| 2 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,686,000.00 |
| 3 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 336,913.04 |
| 4 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 331,000.00 |
| 5 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 657,089.45 |
| 6 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 129,017.79 |
| 7 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,875,000.00 |
| 8 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 595,000.00 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 275,100.00 |
| 10 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 50,967.41 |
| 11 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,400.00 |
| 12 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 427,123.07 |
| 13 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,000.00 |
| 14 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 551,000.00 |
| 15 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 218,910.61 |
| 16 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 153,921.53 |
| 17 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 136,921.75 |
| 18 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 152,074.47 |
| 19 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | | 10,000.00 | 2,250,000.00 |
| 20 | புங்கன்குளம் உள்ளூர் உற்பத்தியாளர்களது அறிமுகச்சந்தை | | 2,000.00 | 6,910.06 |
| 21 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | | 5,000.00 | 317,000.00 |
| 22 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாகவுள்ள வாகன பாதுகாப்பு நிலையம் | | 1,000.00 | 339,999.00 |
| 23 | பெரிய கடை மரக்கறிச்சந்தை வாழைப்பழக்கடை வடகிழக்கு மூலையாகவும், சந்தையின் வைரவர் கோவிலில் வடமேற்கு மூலையாகவும் உள்ள துவிச்சக்கரவண்டி. மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | | 5,000.00 | 250,000.00 |
| 24 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன்சந்தைக்கு மேல்விளம்பர ஒலிபரப்பு சேவை | | 10,000.00 | 500,000.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில் பாதிப்பு; நிவாரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.2

தெல்லிப்பழை பனை தென்னை வள.அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் அண்மையில் பெய்த மழையால் தொழில் பாதிப்புக்குள்ளாகிய அங்கத்தவர் பணியாளர்களுக்கு 4 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் சங்கத் தலைமைக் காரியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் நா.கணேசன் தலைமையில் கடந்த புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ரி-63)

### போதைப்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் தற்போது பெருமளவான போதைப்பொருள் பாவனையாளர்கள் இரத்த நாளங்களின் ஊடாக உடலில் போதைப்பொருளை ஏற்றிக் கொள்கின்றார்கள். அதனால் எய்ட்ஸ் போன்ற தொற்றுநோய் பரவும் அபாயமும் காணப்படுகிறது.

போதைப்பொருளை இரத்த நாளத்தில் ஏற்றுவதற்காக ஒருவர் பாவித்த அதே ஊசியை இன்னொருவர் பாவிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இவ்வாறு பாவிக்கும்போது, ஒருவருக்கு எய்ட்ஸ் தொற்று இருந்தால் மற்றையவருக்கும் அந்தத் தொற்று பரவக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

இலங்கையில் தற்போது 5 ஆயிரத்து 500 பேர் எய்ட்ஸ் தொற்றாளர்களாக உள்ளனர். வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 90 பேருக்கு எய்ட்ஸ் தொற்றுள்ளது. இவர்களில் யாழ்ப்பாணத்தில் மட்டும் 65 பேர் வசிக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் மூவர் புதிய தொற்றாளர்களாக அவதானிக்கப்பட்டனர். இந்த வருடம் நால்வர் புதிய தொற்றாளர்களாக அவதானிக்கப்பட்டுள்ளனர் - என்றார். (அ-ம-26)

### 13,588 பேர்...

கற்க தகுதிபெற்றுள்ளனர். கடந்த முறை 11 ஆயிரத்து 53 மாணவர்கள் (3.31 வீதம்) அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றனர். இம்முறை 13 ஆயிரத்து 588 மாணவர்கள் (3.39) அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர். தேசிய மட்டத்தில் கண்டி மகளிர் பாடசாலை முதலிடத்தையும், யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை இரண்டாம் இடத்தையும், கொழும்பு றோயல் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன' - என்றார்.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் அக்சயா அனந்தசயனன் என்ற மாணவியே இவ்வாறு தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பிடித்த மாணவியாவார். அவர் மருத்துவராகுவதே தனது இலட்சியம் என்று தெரிவித்தார்.

சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொண்டமை தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

க.பொ.த. சாதாரணதரப்பரீட்சையில்தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்று தமிழ் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவது பெருமையாக உள்ளது. உயர்தரத்தில் உயிரியல் கற்கையை தெரிவு செய்து மருத்துவ பீடத்துக்குச் செல்ல வேண்டும் என்பதே எனது இலட்சியம். பெற்றோருக்கும், பாடசாலை சமூகத்தினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

குறித்த மாணவியின் தந்தை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கணித விரிவுரையாளராகவும், தாய் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீட விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-27-44)

### 'மஹாபொல'...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹாபொல புலமைப் பரிசிலுக்கான நிதி லொத்தர் சீட்டு விற்பனை மூலமே பெற்றுக்கொள்ளப்படுகிறது. லொத்தர் சீட்டின் விலை ஒரேயடியாக 40 ரூபாவாக அதிகரிக்கப்பட்டதனால் அதன் விற்பனையில் சற்று வீழ்ச்சி காணப்பட்டது. எனினும் படிப்படியாக அதன் விற்பனையில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தற்போது வழங்கும் புலமைப்பரிசில் நிதி எந்த வகையிலும் போதாது. அதனை இரண்டு மடங்காக அதிகரிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. பல்கலைக் கழகங்கள் தொடர்பான விடயங்களை முன்னெடுப்பதற்காக உயர்கல்வி ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கு இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் 5 அல்லது 10 வருடங்களில் உயர் கல்வியில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்த முடியும் - என்றார். (அ-ம)

### போதகர்...

முன்தினம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையானார். இரண்டாம் நாளாக நேற்றும் அவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. இதையடுத்தே அவர் கைதுசெய்யப்பட்டார். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவர் எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம)

### துறைமுகப்...

களில் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்றுமுன்தினம் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையே, இரு நாட்டு மக்களின் கோரிக்கைக்கு அமைய இணைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளது. (அ-ம-20)

### பயங்கரவாத...

பதிலாக மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலான சட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2018இல் அந்தச் சட்டவரைவு முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்படவிருந்த தறுவாயில்தான் 2019இல் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இதனையடுத்து ஏற்பட்ட குழப்ப நிலையால் இது தொடர்பான பணி முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையில் கடந்த மே மாதம் தற்போதைய ஜனாதிபதி தலைமையில் சட்டவரைவொன்றை முன்வைத்தோம். அதிலுள்ள சில சரத்துகள் தொடர்பிலும் விமர்சனங்கள் எழுந்தன. எனவே, அனைத்துக் கட்சிகள் மற்றும் இராஜதந்திரிகளுடன் அது சம்பந்தமாக பேச்சு நடத்தினோம். சட்டவரைவை மீளப் பெற்று மாற்றங்களுடன்தான் மீளச் சமர்ப்பித்தோம்.

டிசெம்பர் மாதம் நீதிமன்ற விடுமுறை காலம். சிரேஷ்ட சட்டத்தரணிகள் ஓய்வில் சென்றிருப்பார்கள். எனவே, அவசரமாக நிறைவேற்றிக்கொள்வதற்கு நேரம் பார்த்து சட்டமூலம் முன்வைக்கப்பட்டது என்ற விமர்சனம் எழலாம். ஆனால், அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும். எவருடைய உரிமைகளையும் மீறாத வகையில் சட்டவரைவு நிறைவேற்றப்படும். ஜனவரி, பெப்ரவரியில் அதற்கான வாய்ப்பு உருவாகும்' - என்றார்.

மாவீரர் தினத்தில் கைதானவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் முன்வைத்த கோரிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, 'நீங்கள் (செல்வம்) கூறிய விடயம் பற்றி எனக்கு முழுமையாகத் தெரியாது. அது தொடர்பில் ஆராய்ந்து, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருடன் கலந்துரையாடி, உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்' என்று குறிப்பிட்டார். (அ-ம-44)

### மேலும்...

இந்த வழக்கு விசாரணைகள் யாழ். நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றன. வழக்கு நேற்று விசாரணைக்காக அழைக்கப்பட்டபோதே மேற்படி சாட்சிகள் நீதிமன்றில் தமது சாட்சியத்தைப் பதிவுசெய்துள்ளன. வழக்கு எதிர்வரும் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், மறுநாள் 5ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அநுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள சந்தேகநபர்கள் மற்றும் குற்றவாளிகளால் இவர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளது என்ற காரணத்தாலேயே அவர்கள் அநுராதபுரம் சிறைச்சாலையில் மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-26)

### வேம்படியில்...

ஆகியவற்றில் 184 மாணவர்கள் 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இதன்படி வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 110 பேரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 74 பேரும் '9ஏ' சித்திபெற்றுள்ளனர். (அ-ஒ-66)

### வவுனியாவில்...

வித்துள்ளார்.

சர்வதேச எய்ட்ஸ் தினமான நேற்று வவுனியா பொது மருத்துவமனையில் பாலியல் நோய் தடுப்புப் பிரிவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எய்ட்ஸ்க்கு எதிரான போராட்டம் வெற்றி பெறுவதற்கு சமூகத்தினரது ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. ஓரினச்சேர்க்கையாளர்கள், திருநங்கைகள், போதைவஸ்து பாவனையாளர்கள், விபச்சாரத்தில் ஈடுபடுவோர் ஆகியோரே எய்ட்ஸ் தொற்றுக்குள்ளானவர்களாக அதிகளவு அடையாளம் காணப்பட்டுள்ளனர். முறையான விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்டு, தொற்றுக்குள்ளானவர்களை தொடர்ச்சியாகச் சிகிச்சைக்கு உட்படுத்தும் பட்சத்திலேயே 2030ஆம் ஆண்டிலாவது எய்ட்ஸ் தொற்றிலிருந்து விடுதலை பெற முடியும் - என்றார். (அ-ம-18)

### கைதானோரை...

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

'பயங்கரவாதத் தடைச்சட்டம் மாற்றப்படும் என அரசு அறிவித்தது. ஆனால் 'கேக்' செய்தவர்கள்கூட இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் நிலை காணப்படுகின்றது. மாவீரர் தின நிகழ்வில் வடக்கு-கிழக்கில் பெருமளவான மக்கள் பங்கேற்றிருந்தனர். போராடிய அல்லது மரணித்த உறவுகளை நினைவுகூர அணிதிரண்டனர். இந்த நிகழ்வில் பங்கேற்றவர்களுள் சிலர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது தமிழர்கள்மீது மட்டும் அல்ல இன்று சிங்கள மக்கள் மீதும் பாய்கின்றது. பொலிஸார் சிறு சம்பவங்களைக்கூட பெரிதுபடுத்த இந்தச் சட்டத்தை பயன்படுத்துகின்றனர். அடக்குமுறையைப் பிரயோகிக்க வேண்டாம். அஞ்சலி செலுத்துவோர் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்காவிட்டால் அவர்கள் அமைதியாக அஞ்சலித்து விட்டுச் செல்வார்கள். இதற்கு அரசு அனுமதி வழங்கவேண்டும். மாவீரர் தினத்தன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதான அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' - என்றார். (அ-ம-44)

### பயங்கரவாதத்...

ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

மாவீரர் நினைவேந்தலில் கலந்து கொண்ட பலர், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அந்தச் சட்ட ஏற்பாடு தொடர்பில் விவாதங்கள் மீண்டும் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தால் சர்வதேசத்துக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இலங்கை அரசாங்கம் மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி விழா

தென்மராட்சி கல்வி வலயத்தின் தமிழ்மொழித் தினவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த. கிருபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் வே. ஞானசம்பந்தன், சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி புனிதகுமாரி ஈழநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(அ-ம-159)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் சுப்பர்மார்க் கட்டுக்கு வேலையாட்கள் தேவை.
காசாளர் - கணினி தெரிந்தவர்கள் (பெண்கள்)
பொதி செய்பவர்கள் - பெண்கள்
தொடர்பு: 077 355 1631/ 077 392 9835
T.T.R.Supermarket
85,87, Rakka Road, Jaffna.

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா மற்றும் தாய்லாந்திலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) எம்மிடம் உத்தரவாதத்துடனும் நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: இந்தியா மற்றும் தாய்லாந்து கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்



### ஆர்க் . என் . கம்பனி

150, ஸ்ராங்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3671



Hotline: 071 535 7799 / 071 973 9917

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 04 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km.
  திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 km.
  நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 km.
- திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 km.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
பார்வையிடும் நேரம்:-
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்
077 814 7389,077 986 5457

(CS 28625) A-1

# Physics A/L Classes

*English & Tamil Medium*
*2025 Batch*
*by*

**Mr. S. சோதிலிங்கம்**
(BSc (Hons), P.G.D in Edu.)

புதிய பிரிவு ஆரம்பம்
05.12.2023 - 6.00pm - 7.30pm
06.12.2023 - 6.00pm - 7.30pm

No. 2, அம்மன் வீதி, கந்தர்மடம்
வீனஸ் வைத்தியசாலைக்கு அருகாமையில்

தொடர்புகளுக்கு : 077 404 4365

# TECHNO WORLD

TECHNO WORLD
INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை)

இம்முறை தேசிய, மாவட்டரீதியில் முதல் நிலை பெற்ற மாணவர்கள் தொடர்ந்தும் ஆறாவது முறையாகவும் முன்னிலையில்

### உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு (BIO SYSTEMS TECHNOLOGY)

| Name | Results | Rank | Name | Results | Rank | Name | Results | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிலக்ஸ்சன் | 2AB | 01 | சஜீனா | C2S | 06 | சனுக்ஸ்சி | 2BC | 18 |
| அஸ்வினி | A2B | 01 | ஜீரோசி | 2CS | 07 | சாங்கீதா | 2CS | 18 |
| நிரோமி | B2C | 02 | சயந்தினி | A2B | 07 | குகப்பிரியா | B2C | 20 |
| அபிவர்சான | B2C | 02 | தனுசா | C2S | 07 | தவருக்சன் | 3C | 22 |
| கனிஸ்கா | 3B | 02 | அர்ச்சனா | B2C | 07 | தர்சிகா | 3C | 22 |
| அன்ரனிஸ் | 3B | 02 | டிலுக்சினி | C2S | 09 | பிரவினா | 2CS | 22 |
| நந்தவி | 3C | 03 | ஜெயதர்சினி | 2CS | 11 | திலக்சிகா | 3C | 24 |
| அகுஸ்ரா | 2BC | 03 | சபிர்னா | 2CS | 12 | மிரர்த்தன் | 3C | 24 |
| டென்சியா | 2BS | 04 | ரிகானி | C2S | 12 | தர்சிகா | C2S | 24 |
| ரேமியன் | 3C | 05 | சதுர்சிகா | B2C | 13 | திலக்சிகா | 3C | 24 |
| காவியா | A2B | 05 | யதுர்சினி | 2CS | 13 | தர்சிகா | 3C | 25 |
| செறின் | 3A | 06 | பவித்திரா | 2BC | 14 | சாமந்தி | 3C | 26 |
| தேனுஜா | B2C | 06 | சிவஸ்துதி | B2C | 16 | சுபகரினி | 2BC | 31 |
| அனுசிகா | ABC | 06 | ரகசா | 2CS | 17 | குகப்பிரியா | 2CS | 35 |

### பொறியியல் தொழில்நுட்பம் (ENGINEERING TECHNOLOGY)


| Name | Results | Rank | Name | Results | Rank | Name | Results | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| திபன்பரபாகர் | 2AB | 01 | ஜானுசன் | 3C | 07 | இனியவன் | 3C | 31 |
| கிருபாகரன் | 2AB | 03 | றேங்கில் | B2S | 08 | ராகுலன் | 3C | 39 |
| நிலோஜன் | 3B | 03 | கஜனான் | 2CS | 08 | தனுசாந் | B2C | 40 |
| கனிஸ்ரன் | 2AB | 04 | சிந்துஜன் | 2CS | 09 | சப்றொன் | A2B | 42 |
| பதுசன் | 2BC | 04 | லக்சன் | C2S | 09 | பிரதீபா | B2C | 43 |
| லக்சனா | 2AB | 05 | மார்க்டெக்சன் | C2S | 10 | புஸ்பகுமார் | 3C | 47 |
| மிரின்டா | 3C | 06 | ஜதுசன் | A2B | 10 | அசிவ் | 2CS | 49 |
| சாம்சன் | BCS | 06 | தமிழ்முலகன் | B2C | 24 | விதுசன் | 2CS | 48 |
| மேரி ஜெர்மிலா | A2B | 07 | பகீரதன் | B2C | 27 | பசித் | B2C | 58 |
| | | | | | | மனுஜன் | 2CS | 59 |
| | | | | | | சகீப் | B2C | 59 |

புதிய பிரிவு ஆரம்பம் A/L 2025
ஆரம்பம் : 03.12.2023 நேரம் : காலை - 8.30
Phone No. 077 017 5346

(cr 41290) (N.1


# மரண அறிவித்தல்

மண்ணில்
28
08
1955



விண்ணில்
30
11
2023

## தர்மலிங்கம் அருணந்தி (அருள்)

அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் (கொக்குவில்) வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தர்மலிங்கம் அருணந்தி (அருள்) 30.11.2023 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் பூபதியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருணாசலம் திருப்பதியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மணிமேகலா (தேவா) வின் பாசமிகு கணவரும், சரோஜினிதேவி, சுந்தரவடிவேல், காலஞ்சென்ற செந்தில்வேல் மற்றும் புஸ்பராணி, காந்திமதி, காந்தரூபி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தினேஸ் (ஜேர்மனி), அன்பழகன் (பிரான்ஸ்), வேணுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரணியாவின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இலட்சுமிகுமார், சியாமளா, யோகேஸ்வரி, விமலராஜா, நித்தியானந்தம், சிவகுமாரன், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், மகாலிங்கம், சோதிலிங்கம் மற்றும் அமிர்தலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், துவாரகன், விஜயாளினி, விதுஷா, வினோஜன், நீக்கிலன், ஜொனகிலன், றோசறி, கௌரிபாலன், கஜந்தன், சாரங்கன், சுவஸ்திகா, அருணன், முகுந்தன், குமுதன் (லண்டன்), வினோதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அல்லைப்பிட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1ம் வட்டாரம், அல்லைப்பிட்டி.
077 5576 325 (மனைவி)
075 4940 267 (மகன்)

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27254) A-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org